# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE
REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX   YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 MARCH   No. 03


## பரிசுத்த வேதாகமம்

**இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்**

**சங்கீதம் 19:1-9**

1. வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.
2. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது.
3. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை.
4. ஆகிலும், அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்.
5. அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது.
6. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.
7. கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.
8. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.
9. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

# ஈசாயின் அடிமரம்!



*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*

நம்முடைய கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தினர் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள்.



இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்திற்கு நன்கு அறியப்பட்ட ஒரு அதிகாரமான ஏசாயா 11–ஐ நான் வாசித்துக் கொண்டிருந்தேன். குறிப்பாக அதன் முதல் வசனத்திற்கு நான் ஈர்க்கப்பட்டேன்.

**ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.** ஏசாயா 11:1.

## அடிமரம்!

இங்கு குறிப்பிடப்பட்ட 'அடிமரம்' என்ற சொல் என் கவனத்தை ஈர்த்தது. ஒரு அடிமரம் என்றால் என்ன ? ஒரு அடிமரம் என்பது ஒரு குறைக்கப்பட்ட வாழ்க்கை அல்லது ஒரு செழித்து வளரும் ஒன்றின் திடீர் முடிவைக் குறிக்கிறது. ஒரு சரிவை குறிக்கிறது. ஒரு காலத்தில் செழித்து வளர்ந்த ஏதோவொன்றின் எச்சம்; செழிப்பு நிறுத்தப்பட்டால் என்ன இருக்கிறது ? இது இறுதியானது; உயிரற்றது; மீதமுள்ளது; எதிர்காலம் இல்லாமல் தெரிகிறது. ஒரு அடிமரம் என்பது ஏற்கெனவே இருந்தவற்றின் முடிவைக் குறிக்கிறது. அது உளுத்துப்போய் இறுதியில் மறைந்துவிடும்.

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் – காலை 2.00 மணியில் இருந்து


தமிழ் ஞாயிறு ஆராதனை – காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...






### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
HON. MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call

*நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர் ~ சங்கீதம் 99:5*

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

தேவகிருபை உங்களை முற்றிலுமாய் ஆட்கொள்ளுவதாக!

இந்த 2025–ம் வருடத்திலும் கடந்த இரண்டு மாதங்களும் தேவன் நம்மை ஆச்சரியமாக நடத்தி வந்திருக்கிறார். அவர் ஒருவருக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாவதாக.

நமது தலைமை நிர்வாக அலுவலகத்தில் ஊழியம் செய்கிற பலருக்கும் சரீர சுகம் மற்றும் குடும்ப சூழ்நிலைகள் சாதகம் இல்லாத சூழ்நிலை இருப்பதால் அலுவலகப் பணிகள் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படுகிறது. இதற்காக பாரம் எடுத்து நமது ஊழியர் நல்வாழ்வுக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

நம்முடைய தலைமைச் சபையில் ஊழியங்கள் அனைத்திலும் தேவ மகிமையை நாங்கள் உணருகிறோம். வேதாகமக் கல்லூரிகளையும் தேவன் வெகுவாய் ஆசீர்வதித்து வருகிறார். குறிப்பாக, 2025–2026–ம் ஆண்டுக்கான மாலைநேரத் தமிழ் டிப்ளோமா வகுப்புகளுக்கு சென்னை சேப்பாக்கம், வேளச்சேரி, சந்தோஷபுரம் ஆகிய இடங்களில் நடைபெறும் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்கும்,** முழு நேரமாக தங்கிப் படிக்கும் வசதியுடன் நடைபெறும் ஒரு வருட இந்தி / ஆங்கிலக் கல்விக்காகவும் தயவு செய்து ஜெபியுங்கள். இந்த நாட்களில் வேதாகமக் கல்லூரிகளில் படிக்க மாணவர்கள் கிடைப்பது மிக அரிதாயிருக்கிறது. உங்கள் ஜெபங்களை நாடி நிற்கிறோம்.

மேலும், பொதுவாக அச்சிடப்பட்ட பத்திரிகைகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாய்க் குறைந்து வருகிறது. நம்முடைய பத்திரிகைகளை 16 மொழிகளில் அச்சிட்டு அதிகப் பிரதிகளை இலவசமாகவேக் கொடுத்து வருகிறோம். இன்னும் ஏராளமான வாசகர்கள் எல்லா மொழிகளிலும் தேவை. வாசிப்பதில் ஆர்வம் உள்ள உங்கள் உறவினர், நண்பர்களுடைய முகவரிகளை எங்களுக்கு அனுப்பி தயவுசெய்து எங்களை உற்சாகப்படுத்துங்கள்.

நமது யூடியூப் செய்திகளை மிகுந்த சிரமங்களின் மத்தியில் நமது ஊழியர்கள் வெகு சிறப்புடன் செய்து நிறைவேற்றி வருகின்றனர். தினமும் அதிகாலையில் இருந்து ஆங்கிலம், இந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் 5 நிமிட செய்திகளை ஒளிபரப்பாக்க தேவன் உதவுகிறார். ஞாயிற்றுக்கிழமை ஆராதனை செய்திகளையும் ஒளிபரப்பு செய்கிறோம். நமது யூடியூப் சானல் முகவரி ECHO OF HIS CALL.

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**, சுவிசேஷ அச்சகம், தபால்வழி வேதாகமக் கல்விகள் யாவும் சிறப்புடன் நடைபெறுகின்றன. தொடர்ந்து ஜெப ஒத்தாசை தேவைப்படுகிறது.

மேலும் விசேஷமாக நாம் நடத்தி வரும் அகில உலக ஆண், பெண் இளைஞர்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியங்களுக்காகவும்** (Global Vision for Youth and Kid Care ministry) ஜெபியுங்கள். இதனை GVYKC என்று சுருக்கமாக அழைக்கிறோம். இதில் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள். பணம் ஒன்றும் அனுப்ப வேண்டியதில்லை. அனுதினமும் உங்கள் தேச நேரப்படி சரியாக இரவு 10.00 மணிக்கு

*"ஆண்டவரே, உலகத்திலுள்ள எல்லா ஆண், பெண் இளைஞர்கள் மற்றும் சிறு குழந்தைகளை நினைத்தருளும். ஆமென்!"*

என்ற இந்த ஜெபத்தைத் தவறாமல் ஏறெடுக்க வேண்டும். இதற்கு உதவியாக உங்கள் கடிகாரம், செல்போன் இவற்றில் இரவு 10.00 மணிக்கு நினைவூட்டல் (alarm) செய்யும்படி ஒழுங்கு செய்து கொள்ளுங்கள். இதனை ஆரம்பித்த இரண்டு வருடங்களில் ஏராளம் பேர் இதில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். ஏராளம் நன்மைகளை தேவன் அளித்துள்ளார். நீங்களும் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரிவியுங்கள். ஆண்டவர் உங்களை நிச்சயம் ஆசீர்வதிப்பார்.

தொடர்ந்து ஜெபங்களாலும், காணிக்கைகளாலும் இந்த ஊழியங்களைத் தாங்குகிற தேவ மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம். தேவ இரக்கம் உங்களுக்கு கிடைப்பதாக!

எனது மகன் பாஸ்டர் அலக்ஸ் சாம்சன் சாம் அவர்கள் 13.02.2025 அன்று கர்த்தருடைய இராஜ்யத்தில் பிரவேசித்துள்ளார்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**
(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ✲ BIBLECOR - Postal Courses (3 languages) ✲ YouTube Ministry ✲ Online Courses ✲ Theological Correspondence Courses (2 languages) ✲ Church Planting ✲ Nehemiah Bible Colleges ✲ Gospel Printing Press ✲ Great Commission Partners ✲ St. Paul's Matriculation School ✲ Crusades ✲ Community Development

## உங்கள் கவனத்திற்கு!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

இந்த வசனம் தாவீதின் ராஜரீக சந்ததி, மிச்சம் மீதியுள்ள ஒரு அடிமரமாக குறைக்கப்பட்டுள்ளதைக் குறிக்கிறது. இந்த அடிமரம் என்பது எஞ்சியவர்கள் – தப்பிப் பிழைத்தவர்கள் – சோதனைகளைத் தாங்கியவர்கள் – துன்பங்களை எதிர்கொண்டவர்கள் – உறுதியுடன் இருந்தவர்கள் ஆவர். ஏசாயா 11:1 என்பது கர்த்தர் தம்முடைய மீதமுள்ள உண்மையுள்ள ஜனத்திற்காக என்ன செய்ய விரும்புகிறார் என்ற வாக்குறுதியாகும். ஒவ்வொரு புயலிலும் அவருடன் ஒட்டிக்கொண்டவர்கள், இயேசு கிறிஸ்துவின் அஸ்திபாரத்தில் உறுதியாக நிற்கிறார்கள்.

தாவீதும் அவருடைய சந்ததியினரும் அரியணையை எப்போதும் ஆட்சி செய்ய வேண்டும் என்பதே கர்த்தரின் அசல் திட்டம். ஆனாலும் வரலாறு வேறு கதையைச் சொல்கிறது. 2 இராஜாக்கள் 24, 25ஆம் அதிகாரங்களில், யூதாவின் கடைசி ராஜாவான சிதேக்கியா (சிதேக்கியா – கர்த்தரின் பரிசு) நேபுகாத்நேச்சாரால் சிறைபிடிக்கப்பட்டான். தாவீது வம்சத்தின் அரச அதிகாரத்தை ஒரு வெளிப்படையான முடிவுக்கு கொண்டு வந்தது என்பதை நாம் அறிகிறோம். ஏறக்குறைய 600 ஆண்டுகளாக இஸ்ரவேலில் ராஜா இல்லை.

இந்த மௌனத்தின்போது தேவன் தமது வாக்குத்தத்தத்தை மறந்து விட்டது போல் தோன்றியது. ஆனால், தேவன் பொய்யுரையாதவர் – அவர் ஏற்ற நேரத்திற்காக காத்திருந்தார். இஸ்ரவேல் மக்கள் யூதர்களின் ராஜாவின் வருகைக்கு மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் காத்திருந்தனர். பின்னர் காலம் நிறைவேறினபோது ஈசாயின் அடிமரத்திலிருந்த ஒரு துளிர் வெளிப்படும் என்று தேவன் அறிவித்தார்.

### துளிர்!

உயிரற்ற அடிமரத்திலிருந்து ஜீவன் எவ்வாறு தோன்றியது ? இது சாத்தியமற்றது என்று தோன்றியது. ஆனால் தேவனால் மிகவும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளைக் கூட புதுப்பிக்க முடியும். வலிமைமிக்க இஸ்ரவேலின் ராஜ்யம் ஒரு முடிவை நோக்கி செல்லுவதாக தோன்றியது. வலிமைமிக்க அந்த ராஜ்யம் உயிரற்ற எச்சத்திற்கு குறைக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மூலம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்கான களமாக இது மாறியது.

தங்கள் அடக்குமுறையாளர்களை கவிழ்க்கத் தயாரான ஒரு வலிமையான மற்றும் சக்தி வாய்ந்த ராஜா என்று மேசியாவை கற்பனை செய்த இஸ்ரவேலரின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, இயேசு தாழ்மையுடன் வந்தார். ஒரு முன்னணையில் பிறந்தார். சில நேரங்களில் மனிதனது எதிர்பார்ப்புகளையெல்லாம் மிஞ்சிவிடுமளவிற்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் காணப்படுகின்றன.

ஈசாயின் அடிமரத்திலிருந்து தோன்றிய துளிர் ஒரு புது வாழ்வுக்கும், நம்பிக்கைக்கும், தேவனிடம் திருப்பப்படுதலுக்கும் அடையாளமாகும்.

துளிருக்கு ஆங்கிலத்தில் உள்ள SHOOT என்ற வார்த்தையின் எழுத்துக்களை நாம் தியானிக்கலாம்.

### S → 1. வாக்குறுதிகளின் ஆதாரம்!

### 1. SOURCE OF PROMISES!

நம்முடைய தேவன் வாக்குத்தத்தங்களின் தேவன். அவர் உடன்படிக்கைகளை நிறைவேற்றுகிறவர்; ஒருபோதும் அவரது வார்த்தையை வெறுமையாய்த் திரும்பப் பெறுவதில்லை. நமது அடித்தளம் அவருடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்படும்போது, நாம் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாயிருப்போம். ஏனென்றால் அவருடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவில் ‘ஆம்’ என்றும் ‘ஆமென்’ என்றும் இருக்கின்றன. தேவன் தம்முடைய வார்த்தையை ஒருபோதும் மறக்க மாட்டார். எதிர்பாராத பருவங்களில்கூட அவர் தனது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார். ஏனென்றால், அவர் தமது வாக்குத்தத்தங்களுக்கு உண்மையுள்ளவர்.

அவர் தனது வாக்குத்தத்தங்களை தாவீதுக்கு நிறைவேற்றினார். **உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் ...** 2 சாமுவேல் 7:16.

ஒரு காலகட்டத்தில், அவர் தனது வாக்குத்தத்தத்தை மறந்துவிட்டதாகவே தோன்றியது. ஏனெனில், சிங்காசனத்தில் தாவீதின் சந்ததியில் ராஜா ஒருவரும் இல்லை. இருப்பினும், அடிமரத்திலிருந்து ஒரு துளிர் வெளிவந்தது. எதிர்பாராத தருணத்தில் தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றியது. **... நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை ...** ஆதியாகமம் 28:15.

ஆதியாகமம் 22 இல் ஆபிரகாமின் சந்ததியினர் நட்சத்திரங்களைப் போலவே ஏராளமானவர்களாக இருப்பார்கள் என்று தேவன் வாக்கு பண்ணினார். எனினும், வாக்குத்தத்தத்தின் பிள்ளையான தனது மகன் ஈசாக்கைப் பலியிடும்படி தேவன் கேட்டபோது ஆபிரகாமின் விசுவாசம்


**Statement about ownership and other particulars about the Newspaper Echo of His Call (Tamil) - Form IV (See Rule 8)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | **New No. 8 & 10, Old No. 18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai - 600 005.** |
| 2. Periodicity | : | **Monthly** |
| 3. Printer, Editor, Owner & Publisher | : | **S. Sam Selva Raj** (Same Address) |
| 4. Nationality | : | **Indian** |

I, **S. Sam Selva Raj** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**March 2025** **S. Sam Selva Raj.**



**தேவனின் வாக்குத்தத்தம்! – ஆபிரகாமின் சந்ததியினர் நட்சத்திரங்களைப் போலவே ஏராளமானவர்களாக இருப்பார்கள்**

சோதிக்கப்பட்டது. ஆபிரகாம் கத்தியை உயர்த்தியதைப் போலவே தேவன் ஒரு ஆட்டுக்குட்டியை பதிலீடாக வழங்கினார். சூழ்நிலைகள் சாத்தியமற்றதாகத் தோன்றினாலும்கூட, தேவன் தனது வாக்குத்தத்தங்களைப் பாதுகாக்க உண்மையுள்ளவர் என்பதை இந்த சம்பவம் நிரூபிக்கிறது.

இன்றே அவரது வாக்குத்தத்தங்களை உரிமை கொண்டாடுங்கள்!

## H→ 2. மீட்டெடுக்கப்பட்ட நம்பிக்கை!

## 2. HOPE RESTORED!

இயேசு கிறிஸ்துவின் செய்தி நம்பிக்கைக்குரிய செய்தியாகும். இது நம்பிக்கையற்ற சூழ்நிலைகளில் உள்ள அனைவருக்கும் நம்பிக்கையளிப்பதாகவும் உள்ளது. உலகெங்கிலும் பலர் தங்கள் உறவுகள், பொருட்கள், எதிர்காலம், வேலை மற்றும் மிக முக்கியமாக, தங்களுக்குள் நம்பிக்கையை இழந்து போராடுகிறார்கள். இயேசு கிறிஸ்து இதுபோன்ற உயிரற்ற சூழ்நிலைகளில் நம்பிக்கையை மீட்டெடுக்கிறார் என்பதே நல்ல செய்தியாகும்.

உயிரற்ற அடிமரத்திலிருந்து ஒரு துளிர் வெளிவருவதைப் போலவே, இயேசுவும் உயிரற்ற சூழ்நிலைகளை புதிய வாழ்க்கையின் ஊற்றுகளாக மாற்றுகிறார். இதுவே இயேசுவின் பிறப்பின் மைய செய்திகளில் ஒன்றாகும். இதுதான் நமது நம்பிக்கை. ஒரு காலத்தில் உயிரற்ற மற்றும் நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட அடிமரம் ஒரு துளிரைக் கொண்டுவரும். அதுதான் ஒரு புதிய வாழ்க்கை!

ஒரு காலத்தில் இந்த அடிமரத்தில், இலைகள், பூக்கள் காணப்பட்டு பறவைகள் அதன் கிளைகளில் கூடு கட்டி வாழ்ந்தன. மேலும், நிழலையும், பாதுகாப்பையும் அளித்த ஒரு பச்சை மரமானது இப்போது உடைந்து போய் வெறுமையாகவும், உயிரற்றதாகவும் நிற்கிறது. இது பயனற்றதாகத் தெரிகிறது. நோக்கம் இல்லாமல், சிதைவதற்கு விடப்பட்டது. ஆயினும்கூட, இந்த பாழடைந்த நிலையில், ஒரு துளிர் வெளிப்படுகிறது. இப்பொழுது இது ஜீவன் நிறைந்த ஒரு புதிய கிளையாகக் காணப்படுகிறது.

கடுமையான பஞ்சத்தின்போது, சாறிபாத்தின் விதவை தனக்கும், மகனுக்கும் ஒரு கடைசி உணவைத் தயாரிக்க விறகுகளைச் சேகரித்து வந்தாள். எலியாவின் வார்த்தையின்படி, அவள் தன்னிடமிருந்த கடைசி மாவையும், எண்ணெயையும் பயன்படுத்தி அவனுக்கு அப்பம் சுட்டுக் கொடுத்



**விறகுகளைச் சேகரிக்கும் சாறிபாத்தின் விதவைத்தாய்!**

தாள். பஞ்சம் முடியும் வரை அந்த விதவையின் வீட்டில் பானையில் மாவும், குடத்தில் எண்ணெயும் குறைந்து போகாத அற்புதத்தை தேவன் அந்த விதவையின் வீட்டுக்குச் செய்தார். (1 இராஜாக்கள் 17:7–16)

உயிரற்ற மரத்திலிருந்து தோன்றிய துளிரைப்போலவே, நம்பிக்கையற்ற சூழ்நிலைகளிலும் தேவன் நம்பிக்கையையும் ஜீவனையும் எவ்வாறு மீட்டெடுக்கிறார் என்பதை மேற்கண்ட இச்சம்பவம் விளக்குகிறது.

உங்கள் நிலைமை எவ்வளவு நம்பிக்கையற்றதாகத் தோன்றினாலும், இயேசுவை நம்புங்கள். அவரே வாக்குத்தத்தங்களின் ஆதாரமாகவும், நம்பிக்கையை மீட்டெடுப்பவருமாவார்.

### தேவனுடைய மறுசீரமைப்பும் புதிய துவக்கமும்!

**நம்பிக்கையை மீட்டெடுக்கிறார்:**

தேவன் மற்றவர்களுக்குச் செய்ததைப் போலவே நம் வாழ்க்கையிலும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை மகிழச் செய்யும் மறுசீரமைப்பின் ஆதாரங்களாகவும் மாற்றமுடியும். தன்னுடைய துயரங்களை கர்த்தரின் பாதங்களில் கொண்டு வந்த விதவையைப் போலவே, நாமும் நம்முடைய பாரங்களை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைப்போமாக! நாம் அவரிடத்தில் எல்லாவற்றையும் ஒப்படைக்கும்போது, அவர் நம் துக்கத்தை மகிழ்ச்சியாக மாற்றி, நமது நம்பிக்கையை மீட்டெடுக்கிறார். இழந்துவிட்டதாக நாம் நினைத்த நம்பிக்கையைக்கூட இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே புதுப்பிக்க முடியும்.

## O→ 3. இழப்பை மேற்கொள்பவர்!

## 3. OVERCOMER OF LOSS!

நம்முடைய சூழ்நிலைகளுக்கு நாம் பலியாகிவிடாமல் அவைகளை மேற்கொள்பவர்களாக உயரவேண்டும் என்று

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

**நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்**

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE REACHING NATIONS

**Diploma in Theology**

போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)

உடனே அணுகவும் !

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.**

தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2025 மார்ச் 19 முதல் ஏப்ரல் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மார்ச் 19 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், விசுவாசப்பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும் மற்றும் அவர்கள் குடும்பத்தினரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

மார்ச் 20 ⇨ நமது களப்பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் தொலைதூரப் பகுதிகளில் தேவப்பணியில் ஈடுபட்டிருப்பதற்காக ...

மார்ச் 21 ⇨ உலகத்திலுள்ள வேதாகமம் மற்றும் கிறிஸ்தவ நூல்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் தேவைகளை சந்தித்து வருவதற்காக ...

மார்ச் 22 ⇨ தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு மத்தியிலும் நமது ஊழியங்களுக்கு பொருளாதார ஆதரவு அளித்து வரும் பங்காளர்களை தந்த கிருபைக்காக ...

மார்ச் 23 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி**யின் இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்காக ...

மார்ச் 24 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு உடல்நலம் மற்றும் தேவபாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக ...

மார்ச் 25 ⇨ இணை ஊழியங்களுக்கு பொருளாதார ஆதரவு மற்றும் ஜெப ஆதரவு கொடுக்க வைத்த கிருபைக்காக ...

மார்ச் 26 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

மார்ச் 27 ⇨ மிஷனரிகளால் தொடங்கப்பட்ட கிறிஸ்தவ பள்ளிகளின்மூலம் உலகை ஆசீர்வதித்து வருகிற கிருபைக்காக ...

மார்ச் 28 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்ததற்காக ...

மார்ச் 29 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப் சானலில் புதிய subscribers அதிகரித்து வருவதற்காக ...

மார்ச் 30 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

மார்ச் 31 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும், அவர்களது குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஏப்ரல் 01 ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பீதி மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுத்து வரும் கிருபைக்காக ...

ஏப்ரல் 02 ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ...

ஏப்ரல் 03 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டினதற்காக ..

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஏப்ரல் 04 ⇨ அரசாங்கத் தேர்வை எதிர்நோக்கி இருக்கும் நமது 10–ம் வகுப்பு **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** மாணவர்களுக்காக ...

ஏப்ரல் 05 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஏப்ரல் 06 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் நமது பன்மொழி ஊழியங்களில் புதிய தரிசனங்களுடன் செயல்படவும் ஆசீர்வதிக்கப் படவும் வேண்டி ...

ஏப்ரல் 07 ⇨ போதைப்பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டி ...

ஏப்ரல் 08 ⇨ உலகில் பரவிவரும் தவறான பழக்கவழக்கங்களில் இருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களை பாதுகாக்க வேண்டி ...

ஏப்ரல் 09 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக ...

ஏப்ரல் 10 ⇨ உலகில் நடைபெற்றுவரும் குழந்தைக் கடத்தலை அகற்ற வேண்டி ...

ஏப்ரல் 11 ⇨ உலக சபைகளின் எழுப்புதலுக்காக ...

ஏப்ரல் 12 ⇨ உலக நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள், முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் சபை உறுப்பினர்களை ஆசீர்வதிக்க வேண்டி ...

ஏப்ரல் 13 ⇨ உலகத்திலுள்ள அனைத்து இளம்தலை முறையினரும், குழந்தைகளும் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி ...

ஏப்ரல் 14 ⇨ உலகமனைத்திலும் உள்ள மக்களின் தேவைகள் சந்திக்கப்பட ...

ஏப்ரல் 15 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடு தலிலும் அனைத்து நாடுகளும் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ...

ஏப்ரல் 16 ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...

ஏப்ரல் 17 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச்சபைகளில் நடைபெறும் புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஆராதனைகளுக்காக ...

ஏப்ரல் 18 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

தேவன் நம்மை அழைக்கிறார். இந்த ஆண்டு அல்லது கடந்த காலத்திலிருந்து நீங்கள் இழந்து போனவைகளைப் பொருட்படுத்தாமல், இயேசு கிறிஸ்து உங்களையும், நீங்கள் இழந்து போனவைகளையும் மீட்டெடுக்கிறார். அவர் மறுசீரமைப்பு மற்றும் ஒப்புரவாக்குதலின் தேவன் என்பதால் அவர் நம்மை பிதாவிடம் ஒப்புரவாக்குகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கீழ்ப்படியாமையினாலோ, பாவத்தினாலோ அல்லது தேவனைவிட்டு விலகிச் சென்றதாலோ நீங்கள் எதை இழந்தாலும் அவர் அதை மீட்டெடுக்க முடியும். தனது சிலுவை மரணத்தின் மூலம் பிதாவுடனான நமது உறவை மீட்டெடுக்க இயலுமென்றால், நம் வாழ்வின் பிற அம்சங்களையும் அவரால் மீட்டெடுக்க முடியும். நாம் தேவனுடன் ஒப்புரவாகும்படி இயேசு மரித்தார். நீங்கள் எதை இழந்தாலும், அவருடைய வாக்குத்தத்தத்தை உரிமை கொண்டாடவும், அதை மீட்டெடுக்கவும் அவரை நம்புங்கள்.


ஜீவனற்ற ஒரு மரத்திற்கு தேவன் உயிரைக் கொண்டு வர முடியுமென்றால் அவர் உங்களுக்கும் எனக்கும் இன்னும் எவ்வளவு அதிகமாய்ச் செய்ய முடியும்? யோபுவின் வாழ்க்கையை கவனியுங்கள். அவர் எல்லாவற்றையும் இழந்தார் – அவரது குழந்தைகள், செல்வம் மற்றும் ஆரோக்கியம். ஆயினும்கூட, அவரது துன்பம் தீவிரமாய் இருந்தபோதிலும், யோபு கர்த்தருக்கு உத்தமமாக இருந்தார். இறுதியில், கர்த்தர்



தேவனிடத்தில் அனைத்தையும் திரும்பப் பெற்ற யோபு!

எல்லாவற்றையும் முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகமாக அவருக்குக் கொடுத்தார். (யோபு 42 ம் அதிகாரம்) கற்பனை செய்யமுடியாத இழப்புக்குப் பிறகும் நம்முடைய தேவன் ஆசீர்வதிக்கும் ஒரு மீட்பர் என்பதை இது நிரூபிக்கிறது.

இதேபோல், 1 சாமுவேல் 30ம் அதிகாரத்தில் தாவீது எல்லாவற்றையும் அமலேக்கியர்களிடம் இழந்தார்; விரக்திக்கு பதிலாக, அவர் தேவனுக்குள் திடன் கொண்டார்; தேவன் எல்லாவற்றையும் மீட்டெடுத்தார். நீங்கள் இழந்த அனைத்தையும் தேவன் உங்களுக்குத் திரும்ப அளிப்பாராக.



அனைத்தையும் திரும்பப் பெற்ற தாவீது!

## 4. புதிய துவக்கங்களை திறப்பவர்!

## 4. OPENER OF NEW BEGINNINGS!



நம் ஒவ்வொருவரைக் குறித்தும் தேவனுக்கு ஒரு திட்டம் உள்ளது; அது நமக்கு நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் தரும் திட்டம். அவருடைய உள்ளங்கைகளில் நாம் வரையப்பட்டுள்ளோம். இருப்பினும், வாழ்க்கையில் சில நேரங்களில் ஏற்படும் எதிர்பாராத திருப்பங்களால் நாம் செல்ல வேண்டிய திசையை அறியாதவர்களாக உணரலாம்.

ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரண்டாவது வாய்ப்புகளின் தேவன். நாம் தவறு செய்யும் போது கூட, அவர் நம்முடைய குழப்பங்களிலிருந்து அழகான ஒன்றை உருவாக்க முடியும். ரோமர் 8:28–ன் படி தேவனை நேசிப்பவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

அவர் புதிய வாசல்களையும், புதிய தொடக்கங்களையும் திறப்பவர். இதை வாசித்துக் கொண்டிருக்கும்போது உங்கள் வாழ்க்கையிலும், புதிய வாய்ப்புகளும், புதிய தொடக்கங்களும் உண்டாகட்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இயேசு கிறிஸ்து நமக்கு ஒரு நோக்கத்தையும், வாழ்க்கையையும் ஏராளமாகக் கொடுக்க வந்தார். ஜெபத்தில் உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்படையுங்கள், அவர் எல்லாவற்றையும் புதியதாக மாற்றுவார்.

நம்பிக்கையற்ற நிலைமையை ஒரு புதிய தொடக்கமாக மாற்றி ஒன்றுமில்லாமையிலிருந்து தேவன் ஜீவனை உருவாக்குகிறார். ஒரு துளிர் – ஒரு காலத்தில் இறந்து விட்டதாகத் தோன்றிய மரத்திலிருந்து – வெளிப்படும் புதிய வாழ்க்கையின் சின்னம். ஜீவனற்ற இடங்களில் ஜீவனையளிக்கக் கூடிய வல்லமை தேவனுக்கு உண்டு.

உலர்ந்த எலும்புகளுடன் பேச எசேக்கியேல் 37 நமக்கு நினைவூட்டுகிறது;



எசேக்கியேல் கண்ட உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் தரிசனம்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

## இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்


## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :




**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

## இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

**வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)**

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## நல்ல நண்பர்கள்!

*. . . கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான் – நீதிமொழிகள் 16:20.*

என் ஊழியக் காலங்களில் இடைப் பகுதியில், அயல் நாடுகளில் ஊழியர்கள் எப்படியிருக்கிறார்கள் என்றும், அயல் நாடுகளில் மக்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படியிருக்கிறது என்றும், அங்கு ஊழியங்கள் எப்படி நடைபெறுகின்றன என்றும் அறிய எனக்கு விருப்பம் ஏற்பட்டது. இதற்கு சாதகமான ஆள் பலமும், பணபலமும், ஆவிக்குரியத் திறமைகளும் அந்த நாட்களிலும் என்னிடம் இல்லாதிருந்தன.

ஆனால், ஏதோ ஒரு தைரியத்தால் 1989–ம் வருடம் முதற்பகுதியில் என் ஊழியத் திட்டங்களை என் டயரியில் எழுதும்போது அந்த வருடம் ஆகஸ்ட் மாதம் மலேசியா நாட்டுக்குப்போகப் போவதாக எழுதிவிட்டேன். சுமார் மூன்று மாதக் காலம் இதனை நான் மறந்து விட்டேன். ஆனால் திடீரென்று ஒருநாள் என் டயரியைப் பார்க்கும்போது மலேசியாவுக்குப்போக வேண்டிய நாள் நெருங்குவதை உணர்ந்து செய்வது அறியாமல் திகைத்தேன். இந்த விஷயத்தை ஆண்டவரிடம் ஜெபத்தின் மூலம் கொண்டு சென்றேன். **நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.** பிலிப்பியர் 4:6.

நாட்கள் கடந்தன. ஒரு வழியும் பிறக்கவில்லை. வெளிநாடு சென்று ஊழியம் செய்ய எனக்கு எந்த அந்தஸ்தும் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனினும், தேவன்மேல் உள்ள விசுவாசத்தை நான் இழக்கவில்லை.

இப்படியிருக்கையில் மலேசியா போன்ற நாடுகளுக்கு அடிக்கடி சென்று ஊழியம் செய்து வந்த சென்னையிலுள்ள ஒரு சகோதரனை சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவரிடம் என் விருப்பத்தைக் கூறினேன். அவர் சென்னையிலுள்ள தன்னுடைய வீட்டிற்குச் சென்று ஆலோசனைகளும், தகவல்களும் பெறும்படி என்னிடம் சொன்னார். அதன்படி ஒருநாள் அதிகாலையில் சற்று தூரத்தில் உள்ள அவர் வீட்டுக்குச் சென்றேன். அன்று அவர் வேறு வேலையில் இருப்பதாகக் கூறி அடுத்த நாள் வரச்சொன்னார். அடுத்த நாள், நான் சென்றபோது வேறு ஒரு நாள் வரச் சொன்னார். இப்படி ஒரு மாதகாலமாக அவரைத் தேடிச் சென்று வந்ததால் என் நேரமும், பணமும் விரயமாயிற்று. எனக்கு உதவி செய்ய அவருக்கு விருப்பம் இல்லை.

இப்படிப் பலமுறைத் தேடிச் சென்றபின் ஒருநாள் என்னைப் பார்த்து "நீங்கள் மலேசியாவுக்குப் போகமுடியாது. என்னைப் போன்ற வரம்பெற்ற, திறமைசாலிகள்தான் அங்குப் போகமுடியும். உங்களை அங்குள்ள யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இனிமேல் என்னிடம் வரக்கூடாது" என்று கூறி என்னைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆனால் நான் மனம்தளராமல் தேவ சித்தத்துக்குப் பூரணமாய் ஒப்புக் கொடுத்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். நாட்கள் கடந்தன.

சுமார் இரண்டு வாரங்களுக்குப் பின் ஒருநாள் வழக்கம் போல் எனக்கு வந்தத் தபால்களைப் பிரித்துப் படிக்கும்போது, மலேசியாவில் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதைப் பிரித்துப் படித்தபோது, மலேசியாவில் உள்ள பாஸ்டர் தேவராஜுலு என்னும் தேவ ஊழியர் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்.

*கர்த்தருக்குள் அன்பார்ந்த என் சகோதரன் எஸ். சாம் செல்வ ராஜ் அறிவது,*

*நான் ஒரு புத்தகப் பிரியன். இன்று வழக்கம்போல் மலேசியாவில் உள்ள ஒரு பழைய புத்தகக் கடைக்குச் சென்று ஏதாவது பயனுள்ள பழைய புத்தகங்கள் கிடைக்குமா என்று நான் தேடி அலசிக் கொண்டிருந்தபோது, தாங்கள் வெளியிடும் மாதப்பத்திரிகை* **அழைப்பின் எதிரொலி** *யின் பழைய பிரதி ஒன்று மிகவும் கிழிந்த நிலையில் எனக்குக் கிடைத்தது. அதனைப் படித்துப் பார்த்தபோது ஆண்டவரே என்னிடம் பேசினார். தங்கள் பத்திரிகையின் பழைய பிரதிகளையும் எனக்கு அனுப்புங்கள். பணச் செலவுகளை நான் அனுப்புகிறேன். தங்களை நேரில் பார்க்க ஆவலாய் இருக்கிறேன். உங்கள் போக்குவரத்து, தங்குமிடம் சாப்பாடு எல்லாவற்றிற்குமான செலவுகளை நான் ஏற்கிறேன். தயவு செய்து மலேசியாவுக்கு வாருங்கள். சிங்கப்பூர், இந்தோனேஷியா நாடுகளுக்கும் தாங்கள் சென்று ஊழியம் செய்துவர சகல ஏற்பாடுகளையும் நானே செய்கிறேன். தங்களைப்போன்ற தேவ ஊழியர் எங்களுக்குத் தேவை. தங்கள் பதிலை உடனே தெரிவியுங்கள்*

*இப்படிக்கு, அன்புடன் பாஸ்டர் தேவராஜுலு.*

உடனடியாக, போதகர் தேவராஜுலு அவர்கள் மூலம், நான் திட்டமிட்டபடி 1989 ஆகஸ்ட் மாதம் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்குச் சென்று நூற்றுக்கணக்கான மக்களை பாவம், சாபம், தரித்திரம் ஆகியவற்றிலிருந்து இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் விடுவித்து விட்டு இந்தியா வந்து சேர்ந்தேன். அப்போது மேற்கூறிய நாடுகளில் உள்ள ஏராளம் தேவ ஊழியர்களுடன் நல்ல நட்பையும், தொடர்பையும் தேவன் எனக்கு ஏற்படுத்தினார். இன்றும் அவர்கள் என் சிறந்த நண்பர்களாக இருக்கின்றனர்.

தொடர்ந்து தேவன் என்னை வெகுவாய் ஆசீர்வதித்து, தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, லண்டன், ஸ்காட்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா, இலங்கை போன்ற தேசங்களுக்குப் பலமுறை அழைத்துச் சென்று என்னை பயன்படுத்தி வருகிறார்.

இப்போது பலர் என்னைப் வெளிநாடுகளுக்கு வரும்படி அழைத்தாலும், எல்லா நாடுகளுக்கும் செல்ல நேரம் இல்லாத அளவுக்கு தேவன் என்னை வெகுவாய் ஆசீர்வதித்துள்ளார்.

இச்செய்தியை வாசிக்கிற என் அன்பரே, நான் பிரசங்கிக்கிற இயேசுகிறிஸ்துதான் மெய்யான ஆண்டவர். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். அவரை நம்புங்கள். அவரிடம் வாருங்கள். அவருக்காக ஊழியம் செய்ய முன் வாருங்கள். அவர் உங்களையும் ஆச்சரியமான வழிகளில் நடத்தி உங்களை ஆசீர்வதிப்பார்.

**அவர் கன்மலையைத் தண்ணீர்த்தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்.** சங்கீதம் 114:8.

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

அவை மீண்டும் உயிர்ப்பிக்கப்படும். ஜீவனற்ற ஒவ்வொரு சூழ்நிலையிலும் வாழ்க்கையை பேசுங்கள், ஏனென்றால் அது இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் வாக்குத்தத்தமாகும்.

உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் தரிசனத்தை எசேக்கியேல் கண்டார். தீர்க்கதரிசனம் உரைக்க தேவன் கட்டளையிட்டபோது, எலும்புகள் ஒன்றாக வந்து, மாம்சத்தால் மூடப்பட்டு, சுவாசம் பெற்றன; ஒரு பரந்த இராணுவமாக மாறியது. உயிர்த்தெழுதலுக்கும், புதுப்பித்தலுக்கும் பெயர்போன இந்த சம்பவம், வாழ்க்கையின் வெறுமையானதும், ஜீவனற்றதுமான சூழ்நிலைகளில் கூட புதிய தொடக்கங்களை தேவனால் உருவாக்க முடியும் என்பதை நமக்கு உறுதியளிக்கிறது.

நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள்! ஒரு புதிய ஆரம்பம் உங்களுக்கு காத்திருக்கிறது. நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பீர்கள். அவரை நம்புங்கள். ஏனென்றால், தேவன் சர்வ வல்லமை உடையவர். தீர்வற்றதாகத் தோன்றும் சவால்களை நாம் எதிர்கொள்ளும் போதுகூட, அவர் சாத்தியமற்றவைகளைச் செய்ய வல்லவர்.

## T→ 5. மெய்யான திராட்சைச்செடி!

## 5. THE TRUE VINE!

மெய்யான திராட்சைச்செடியாகிய இயேசு கிறிஸ்து நாம் நிறைவுள்ளவர்களாக வாழவும், பிதாவின் மகிமைக்காக கனி கொடுக்கவும் நமக்கு உதவுகிறார். கனி கொடுக்கும்படி நாம் அவரை நம்ப வேண்டும். இயேசு உலகிற்கு வந்தார். இயேசு உலகிற்கு வந்தபடியினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறி அவருடைய ராஜ்யத்திற்கேற்ற பலனைத் தர முடியும். **அவர் இல்லாமல், நம்மால் எதுவும் செய்ய முடியாது.** (யோவான் 15:5)



**அவரில் நிலைத்திருக்கிறவர்கள் பிதா மகிமைப்படும்படி மிகுந்த கனிகளைக் கொடுப்பார்கள்**

கிளை என்றால் கனியையும், வளர்ச்சியையும், மிகுதியையும் குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம் பரலோகத்திலுள்ள பிதா மகிமைப்படும்படி கனிகொடுக்கும்படி அழைக்கப்படுகிறோம். **நானே மெய்யான திராட்சைச்செடி என்றும், சீஷர்கள் கொடிகள் என்றும் இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்தார். தனக்குள் இருக்கும்படி அவர்களை ஊக்குவித்தார். அவர் இல்லாமல் நம்மால் எதுவும் செய்ய முடியாது. அவரில் நிலைத்திருக்கிறவர்கள் பிதா மகிமைப்படும்படி மிகுந்த கனிகளைக் கொடுப்பார்கள்.** (யோவான் 15)

மெய்யான திராட்சைச்செடியாகிய இயேசுவைச் சார்ந்திருப்பதின் மூலம் நாம் வளர்ச்சியடைந்து கனிகொடுக்க இயலும் என்பதை இச்சத்தியம் நேரடியாக நமக்கு உணர்த்துகிறது.

ஏசாயா 11:1 ஐ நீங்கள் தொடர்ந்து தியானியுங்கள். தேவன் உங்கள் வாழ்க்கையிலும், உங்கள் குடும்பத்திலும், உங்கள் ஊழியத்திலும், உங்கள் பணியிடத்திலும் ஒரு புதிய துளிரைக் கொண்டு வருவார் என்பது எனது பிரார்த்தனை. ஆனால் இந்த சிறிய, குறிப்பிடத்தக்க துளிரானது மாற்றத்தையும், புதுப்பித்தலையும் கொண்டுவரும்.

இந்த ஆண்டு உங்கள் வாழ்க்கையில் நீங்கள் வேரூன்றும்படி இந்த புதிய தொடக்கத்திற்காக நான் பிரார்த்திக்கிறேன். எல்லா நம்பிக்கையின் மூலகாரணராகிய தேவனை நீங்கள் நம்புவீர்களாக! அவர் ஒவ்வொரு இழப்பையும் மீட்டெடுத்து, சாம்பலிலிருந்து சிங்காரத்தைக் கொண்டு வருகிறார். அவர் மறுசீரமைப்பின் தேவன், புதிய தொடக்கங்களுக்கு வாசல்களைத் திறப்பவர்!

இந்த ஆண்டு உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் பலனளிக்கும் ஆண்டாகவும் இருக்கும் என்று நான் உங்களுக்காக பிரார்த்திக்கிறேன். நீங்கள் அவரிடம் நிலைத்திருக்கும்போது பெருக்கமும், வளர்ச்சியும், மிகுதியையும் நீங்கள் அனுபவிக்கலாம். அவரை நம்புங்கள், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள், அதனால் பிதாவுக்கு மகிமையைக் கொண்டு வருகிறீர்கள்.

*******


# அவசரத் தேவை

**அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** அமோக வளர்ச்சியடைந்து வருவதால் ஊழிய தரிசனமும், பிரதிஷ்டையும், உண்மையும் உள்ள கீழ்க்காணும் பொறுப்புகளை ஏற்க ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

- ✳ **தலைமை சபைக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முழுநேர உதவி ஊழியர்கள்**
- ✳ **சென்னையில் உள்ள கிளை சபைகளுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட முழுநேரப் போதகர்கள்**
- ✳ **முழுநேர செக்யூரிட்டிப் பணியாளர்கள்**
- ✳ **DTP மற்றும் தட்டச்சு தெரிந்தவர்கள்**
- ✳ **ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளில் பேச அல்லது எழுத தேர்ச்சி பெற்றவர்கள்**
- ✳ **நிர்வாகத்தில் ஆர்வமுள்ள அலுவலக மேலாளர்கள்**
- ✳ **முழுநேர வேதாகமக் கல்லூரி விரிவுரையாளர்கள்**
- ✳ **ஊழிய வளர்ச்சிப் பணியாளர்கள்**
- ✳ **முழுநேர வாகன ஓட்டுநர்கள்**
- ✳ **மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்**
- ✳ **அழைப்பின் எதிரொலி பத்திரிகை ஆசிரியர் குழுவில் செயல்பட தன்னார்வ உறுதுணையாளர்கள்** (Hon.Co-ordinators)
- ✳ **முழுநேர சமையல் பெண்கள்**
- ✳ **முழு நேர துப்புரவு பணியாளர்கள்**

**தகுதிக்கேற்ப மாத சம்பளம் வழங்கப்படும்**

**அழைப்பின் எதிரொலி** அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்
அல்லது வாட்ஸ்அப் எண் : **98412 71858**
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org மூலம் விண்ணப்பிக்கலாம்.

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது நமது **அழைப்பின் எதிரொலி** (**ECHO OF HIS CALL**) **யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### 2. Bank : ICICI Bank

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### 3. Bank : State Bank of India

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

**E.mail : sam@echoofhiscall.org**

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**வருட சந்தா ரூ. 100/–** **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/24-26
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th FEBRUARY 2025
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**